


நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 99 | 04.10.2025 | SATURDAY | PURATTASI : 18 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 99 | 04.10.2025 | சனிக்கிழமை | புரட்டாசி : 18 | விலை : ரூ.5/– |

3 "3 நாள் கழித்து வீடியோ வெளியிடுபவர் ஒரு தலைவராக முடியாது" கரூரில் மார்க்சிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி காட்டம்

4 750 கிலோ தங்க அம்பாரியை சுமந்து மைசூருவில் தசரா ஜம்பு சவாரி ஊர்வலம்

2 போக்குவரத்து, பொதுத்துறை ஊழியர்களுக்கு 25% தீபாவளி போனஸ்: அன்புமணி வலியுறுத்தல்

# நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாத RSS இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் பிரதமரே அஞ்சல் தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலை

சென்னை, அக்.4-

ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மகாத்மா காந்தியின் 157வது பிறந்த நாளையொட்டி, முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளங்களில் பதிவு வெளியிட்டுள்ளார். "நமது இந்தியா, அனைத்து மத மக்களுக்குமான மதச்சார்பற்ற நாடு எனும் அடிப்படைத் தத்துவத்திற்கு வித்திட்டவர் அண்ணல் காந்தியடிகள்!" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "மக்களிடையே வெறுப்பின் விதைகள் தூவப்பட்டு,



பிரித்தாளும் சக்திகள் தலைதூக்கும் போதெல்லாம் அவற்றை எதிர்கொள்ளும் வலிமையை நமக்கு என்றும் வழங்கும் ஆற்றல் அவர்" என மகாத்மா காந்திக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

அதோடு, பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்திருக்கும் அவர், "நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும்! இதுவே காந்தியடிகளின் பிறந்தநாளில் நாட்டு மக்கள் அனைவரும் ஏற்கவேண்டிய உறுதிமொழி!" என கூறியுள்ளார்.

## ஆபரேஷன் சிந்தூரில் பாகிஸ்தான் ராணுவம் இழந்தது என்ன? பட்டியலிட்ட இந்திய விமானப் படை

புதுடெல்லி: செப்.4-

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின்போது, 4 முதல் 5 போர் விமானங்கள், ரேடார்கள், கட்டுப்பாட்டு மையங்கள், ஓடுபாதைகள் உள்ளிட்டவற்றை பாகிஸ்தான் இழந்ததற்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாக இந்திய விமானப் படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப் படை தினம் வரும் 8ம் தேதி கொண்டாடப்பட் உள்ள நிலையில், அதை முன்னிட்டு டெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய ஏ.பி. சிங், இந்திய விமானப் படையின் தொலைநோக்குத் திட்டங்கள், ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட இழப்புகள் உள்ளிட்டவை குறித்த கேள்விகளுக்கு பதில் அளித்தார். அப்போது அவர் கூறியது: "விமானப்படை தனது போர் திறன்களை மேம்படுத்த 2047க்கான செயல்திட்ட வரைபடத்தை உருவாக்கியுள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றி என்பது



முப்படைகளின் கூட்டு உணர்வுக்குக் கிடைத்த வெற்றி. ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தான் ராணுவம் அதிக இழப்புகளைச் சந்தித்தது. குறிப்பாக, நீண்ட தூர தாக்குதலுக்கான 4 முதல் 5 போர் விமானங்கள், வான்வழி எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு, ரேடார்கள், ஓடுபாதைகள், ஹேங்கர்கள் உள்ளிட்ட இழப்புகளை நாம் பாகிஸ்தானுக்கு ஏற்படுத்தினோம்.

இந்தியா தெளிவான நோக்கத்துடன் ஆபரேஷன் சிந்தூரைத் தொடங்கியது. குறிக்கோள் அடையப்பட்ட உடன் மோதலை விரைவாக முடிவுக்குக் கொண்டு வந்தது. உலகம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது. இந்தியாவின் ராணுவ மற்றும் சிவிலியன் கட்டமைப்புகளைப் பாதுகாக்கவும், எந்தவொரு எதிரியின் அச்சுறுத்தலுக்கும் தீர்க்கமான பதிலடி கொடுக்கவும் ஒரு உள்நாட்டு வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும் திட்டத்தை பிரதமர் மோடி ஆகஸ்ட் 15 அன்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில், சுதர்சன சக்கரா எனும் இந்திய வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதில் முப்படைகளும் இணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளன. ஆபரேஷன் சிந்தூரின் போது ரஷ்யாவின் எஸ்400 வான் பாதுகாப்பு அமைப்பு இந்திய கட்டமைப்புகளை பாதுகாத்த நிலையில், உள்நாட்டு தயாரிப்பாக சுதர்சன சக்கரா உருவாக்கப்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், கூடுதலாக எஸ்400 வான் பாதுகாப்பு அமைப்புகளை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளதா என்ற கேள்விக்கு நேரடியாக பதில் அளிக்காத ஏ.பி. சிங், அந்த தளம் மிகவும் நல்ல தளம் என பதிலளித்தார்.

## சோனம் வாங்சுக்கை விடுவிக்கக்கோரி அவரது மனைவி உச்ச நீதிமன்றத்தில் மனு

புதுடெல்லி: அக்.4-

தனது கணவரை விடுவிக்கக்கோரி சோனம் வாங்சுக்கின் மனைவி கீதாஞ்சலி ஆங்மோ உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

லடாக் பகுதிக்கு மாநில அந்தஸ்து வழங்கக் கோரியும், அரசியலமைப்பு சட்டத்தின் 6வது அட்டவணையில் லடாக்கை சேர்க்க வலியுறுத்தியும் சமூக ஆர்வலரும், கல்வியாளருமான சோனம் வாங்சுக் கடந்த மாதம் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தார். வேறு சில அமைப்புகளும் இதில் கலந்து கொண்டன.

லடாக் யூனியன் பிரதேசத்துக்கு மாநில அந்தஸ்து கோரி தலைநகர் லேயில் அங்குள்ள லே உச்ச அமைப்பு (எல்ஏபி) சார்பில் நடத்தப்பட்ட போராட்டம் கடந்த செப்டம்பர் 24ம் தேதி வன்முறையாக மாறியது. போராட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்ற பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, லடாக்கில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், கடந்த 26ம் தேதி சோனம் வாங்சுக்கை லடாக் போலீஸார் கைது செய்தனர். பின்னர், ராஜஸ்தானின் ஜோத்பூர் மத்திய சிறைக்கு அவர் மாற்றப்பட்டார். சோனம் வாங்சுக்குக்கு சொந்தமான இமாலயன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆல்டர்நேட்டிவ்ஸ் லடாக்(எச்ஐஏஎல்) என்ற பெயரிலான இன்ஸ்டிடியூட்டுக்கு வெளி நாடுகளில் இருந்து ரூ.1.5 கோடி நிதி முறைகேடான வழியில் வந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் புகார் தெரிவித்துள்ளது. மேலும், சோனம் பாகிஸ்தான் சென்று வந்தது குறித்து சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், தனது கணவர் சோனம் வாங்சுக்கை விடுவிக்கக் கோரி அவரது மனைவி கீதாஞ்சலி ஆங்மோ உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சோனம் வாங்சுக்கின் தடுப்புக் காவலுக்கு எதிராக ஆட்கொணர்வு (ஹீபஸ் கார்பஸ்) மனு மூலம் உச்ச நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரியுள்ளேன். சோனம் வாங்சுக்கின் உடல்நிலை, அவர் இருக்கும் நிலை அல்லது தடுப்புக் காவலுக்கான காரணங்கள் குறித்து இதுவரை எனக்கு எந்த தகவலும் இல்லை" என குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, செப்டம்பர் 24 வன்முறைக்குப் பிறகு மத்திய அரசை கீதாஞ்சலி ஆங்மோ கடுமையாக குற்றம் சாட்டி இருந்தார். "இந்தியாவில் உண்மையிலேயே சுதந்திரம் இருக்கிறதா? 1857ம் ஆண்டில் இங்கிலாந்து அரசியின் உத்தரவின் பேரில், 24,000 பிரிட்டிஷ்காரர்கள், 1,35,000 இந்திய சிப்பாய்களைப் பயன்படுத்தி 30 கோடி இந்தியர்களை ஒடுக்கினர். இன்று, ஒரு டஜன் நிர்வாகிகள் 2400 லடாக் காவல்துறையினரை தவறாகப் பயன்படுத்தி உள்துறை அமைச்சக உத்தரவின் பேரில் 3 லட்சம் லடாக் மக்களை ஒடுக்கி சித்ரவதை செய்கின்றனர்" என தனது எக்ஸ் பக்கத்தில் கீதாஞ்சலி ஆங்மோ குற்றம் சாட்டி இருந்தார்.

மேலும், சோனம் வாங்சுக்கை விடுவிக்கக் கோரி குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்டோருக்கு கீதாஞ்சலி ஆங்மோ மனு அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திண்டுக்கல்மதுரை தேசிய நான்கு வழி நெடுஞ்சாலையில் சின்னாளபட்டி பைபாஸ்சாலையில் சோலார் விளக்குகள் அமைக்க வேண்டும் பொதுமக்கள், வாகன ஓட்டுனர்கள் கோரிக்கை

### பைபாஸ் சாலை சந்திப்பில் விளக்குகள் இல்லாததால் தினசரி விபத்துகள் நடக்கும் அவலம்

சின்னாளபட்டி, அக்.04

திண்டுக்கல் மதுரை தேசிய நான்கு வழி நெடுஞ்சாலையில் சின்னாளபட்டி பைபாஸ்சாலையில் சோலார் விளக்குகள் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள், வாகன ஓட்டுனர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். பைபாஸ் சாலை சந்திப்பில் விளக்குகள் இல்லாததால் தினசரி விபத்துகள் நடக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல்லிலிருந்து மதுரை செல்லும் தேசிய நான்கு வழி நெடுஞ் சாலையில் தோமையார்புரம், அண்ணாமலையார் மில், சிறுநாயக்கன்பட்டி பிரிவு, கலிக்கம்பட்டி பிரிவு, செட்டியபட்டி பிரிவு, சின்னாளபட்டி புறநகர் பிரிவு, காந்திகிராமம், அம்பாத்துரை



பிரிவு, முருகம்பட்டி பிரிவு பகுதியில் இருபுற சாலைகளை பாதசாரிகள் கடப்பதற்கும் இருசக்கர வாகனங்கள் திரும்புவதற்கும் தேசிய நான்குவழிச்சாலை நிர்வாகம் சோலார் மின்விளக்குகளை அதை;துக் கொடுத்துள்ளது. ஆனால் நான்கு வழிச்சாலையிலிருந்து சின்னாளபட்டி ஊருக்கள் நுழையும் புறவழிச்சாலை பகுதியில் தேசிய நெடுஞ்சாலை நிர்வாகம் சோலார் மின்விளக்குகளை அமைத்து கொடுக்காததால் அப்பகுதி இருட்டு மயமாக உள்ளது. இரவு 8மணிக்கு மேல் சாலையை கடப்போரும், வாகனங்களில் வந்து திரும்புவோரும் விபத்தில் சிக்கி வருகின்றனர். இதனால் அப்பகுதியில் குறிப்பாக சின்னாளபட்டி பிரிவு ரீ பைபாஸ் சாலை பகுதியில் உயர் சோலார் விளக்குகளை அமைத்துகொடுக்க வேண்டுமென்று பொதுமக்களும், வாகன ஓட்டுனர்களும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

## இந்திய ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடக்கிறது: வெளிநாட்டு நிகழ்ச்சியில் ராகுல் காந்தி விமர்சனம்

புதுடெல்லி: அக்.4-

ஜனநாயகத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல்தான் இந்தியாவுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சனம் செய்துள்ளார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தென் அமெரிக்க நாடான கொலம்பியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு உள்ள இஐஏ பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில், ராகுல் காந்தி பேசும் போது, "இந்தியா உலகத்துக்கு ஏராளமான விஷயங்களை செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஆனால், இந்திய அமைப்பில் சில பிழைகள் உள்ளன. அதனை எதிர்கொள்வதில் இந்தியா சில சவால்களை எதிர்கொள்ள வேண்டும். குறிப்பாக, இந்தியாவில் பல மதங்




கள், மரபுகள் மற்றும் மொழிகள் உள்ளன. ஜனநாயக அமைப்பு அனைவருக்கும் இடமளிக்கும் ஒரு தளமாக செயல்படுகிறது. ஆனால் தற்போது, அந்த ஜனநாயக அமைப்பு பல திசைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. இதுதான் இந்தியாவுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது" என்றார்.

இதுகுறித்து பாஜக செய்தித் தொடர்பாளர் ஷெஷாத் பூனாவல்லா எக்ஸ் பக்கத்தில், "ராகுல் காந்தி மீண்டும் இந்தியாவுக்கு எதிரான பிரச்சாரகர் போல பேசி உள்ளார். வெளிநாட்டுக்குச் சென்று இந்திய ஜனநாயகத்தை விமர்சிக்கிறார். சில நேரங்களில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் நம் நாட்டு உள் விவகாரங்களில் தலையிட வேண்டும் என்று கோருகிறார்" என பதிவிட்டுள்ளார்.

கங்கனா ரனாவத் கண்டனம்: பாஜக எம்.பி. கங்கனா ரனாவத் கூறியதாவது: இந்திய ஜனநாயகம் மீதான ராகுல் காந்தியின் கருத்து அரசுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களையும் அவமானப்படுத்துவது போன்றதாகும். அவர் இகழ்ச்சிக்கு உரியவர். அவர் எங்கு சென்றாலும் நாட்டை விமர்சித்து அவமானப்படுத்த முயற்சிக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் இந்த நாட்டின் மக்கள் நேர்மையற்றவர்கள் என்று கூறுகிறார்.

அப்படியானால், அவர் இந்தியர்களை அறிவில்லாதவர்கள் என்பது போல சித்தரிக்க முயற்சிக்கிறார். அவர் அப்படி சொல்வதால் அவரை இகழ்ச்சிக்கு உரியவர் என்று குறிப்பிடுகிறேன். அவர் எப்போதும் நாட்டுக்கு அவமானத்தை தருகிறார். மேலும் நாடும் அவரை அவமதிக்கிறது" என்றார்.

மகாத்மா காந்தி பிறந்த நாளான நேற்று உள்நாட்டு உடைகள் குறித்து கங்கனா ரனாவத் கூறும்போது, "நான் காதி புடவை, காதி ஜாக்கெட் அணிந்திருக்கிறேன். நம் நாட்டு ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளன. எதிர்பாராதவிதமாக நாம் பல பொருட்களுக்காக பிற நாடுகளை சார்ந்து இருக்கிறோம். இதை தவிர்த்து சுயசார்பை எட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதன்படி, நாம் காதி உடைகளை வாங்குவோம்.

கடந்த வாரம் மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, காந்தி பிறந்த நாளில் காதி பொருட்களை அதிக அளவில் வாங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அவருடைய வார்த்தைக்கு மரியாதை கொடுப்போம்" என்றார்.

## கொல்லப்பட்டதாக கருதிய பெண் உயிருடன் வந்ததால் பரபரப்பு

லக்னோ: அக்.4-

உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 20 வயது இளம்பெண்2023 ம் ஆண்டு திடீரென மாயமானார். எங்கு தேடியும் அவர் கிடைக்காததால், கணவர் வீட்டார் தங்களது பெண்ணை வரதட்சணைக்காக கொலை செய்து மறைத்துவிட்டதாக பெற்றோர் குற்றம்சாட்டினர். இதனை விசாரித்த நீதிமன்றம் கணவர், மாமியர் உட்பட 7 பேர் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டது.

இதுகுறித்து காவல் துறை அதிகாரி அசோக் குமார் கூறியதாவது: மணமானதற்கு பிறகு ஒன்றரை ஆண்டுகள் கழித்து இளம்பெண் காணாமல் போனது குறித்து கணவர் மற்றும் மாமியார் உட்பட 7 பேர் மீது வரதட்சணை கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, உத்தர பிரதேச கண்காணிப்பு குழு இந்த வழக்கை விசாரித்து வந்த நிலையில் காணாமல் போன பெண் மத்திய பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டார். உத்தர பிரதேசத்துக்கு அழைத்து வரப்பட்ட அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இத்தனை காலம் ஏன் அந்த பெண் குடும்பத்தாரை தொடர்பு கொள்ளவில்லை என்பது குறித்தும் விசாரிக்கப்படுகிறது. விரைவில் உண்மை வெளிவரும். இது நீதிமன்ற வழக்கு விசாரணையில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறு அசோக் குமார் தெரிவித்தார்.



# அரசியல் நிகழ்ச்சிகளில் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் கடமை: பழனிசாமி கருத்து

தருமபுரி, அக்.04-

அரசியல் நிகழ்ச்சிகளின்போது மக்களுக்கும், தலைவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் கடமை என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார். தருமபுரியில் நேற்று பொதுமக்களிடையே பழனிசாமி பேசியதாவது: கரூரில் 41 பேர் உயிரிழந்ததற்கு அரசு போதிய பாதுகாப்பு ஏற்படுத்தித் தராததுதான் காரணம்.

அரசியல் நிகழ்ச்சிகளின் போது மக்களுக்கும், தலைவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டியது தமிழக அரசின் கடமை. முதல்வரின் கட்டுப்பாட்டில் காவல் துறை உள்ளதால், கரூர் சம்பவத்துக்கு அவர்தான் பொறுப்பேற்க வேண்டும். மக்கள் கேள்விகளுக்கும் அவர்தான் பதில் கூற வேண்டும். தற்போது ஒரு நபர் ஆணைய விசாரணை தொடங்கியுள்ளது.

அவர்களின் விசாரணை முடிவை பொறுத்திருந்து பார்ப்போம். ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்ட பிறகு ஐஏஎஸ் அதிகாரிகள், காவல் துறை உயர் அதிகாரிகள் இந்த விவகாரம் தொடர்பாக பேசுவது ஏன்? கடந்த அதிமுக ஆட்சியின்போது திமுகவுக்கு பல கூட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது திமுக அரசு எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் அரசியல் செய்கிறது. ஆட்சி, அதிகாரம் இருக்கிறது என்று ஆடினால் காணாமல் போய் விடுவீர்கள்.

தமிழகத்தை தலைகுனிய விடமாட்டோம் என கூறும் முதல்வர் ஸ்டாலின், கரூர் சம்பவத்தின் மூலம் தேசிய அளவில் தமிழகத்துக்கு தலைகுனிவை ஏற்படுத்தி விட்டார். விசிக, இடதுசாரி கட்சிகள் மனசாட்சியை இழந்து விட்டனர். திருச்சி, விழுப்புரத்தில் அவர்கள் மாநாடு நடத்த அனுமதி கேட்ட இடத்துக்கு திமுக அரசு அனுமதி தரவில்லை என்று அப்போது குற்றம் சாட்டினர். ஆனால், தற்போது கரூர் சம்பவத்தில் அரசுக்கு ஆதரவாக நிற்கின்றனர்.

டாஸ்மாக்கில் ரூ.10 முறைகேடு மூலம் பல்லாயிரம் கோடி முறைகேடு நடந்துள்ளது. மீண்டும் அதிமுக அரசு அமைந்தவுடன் இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும். அதேபோல, திமுக ஆட்சியில் முடக்கிவைத்துள்ள திட்டங்கள் அனைத்தும் மீண்டும் அமல்படுத்தப்படும். அதற்கு பொதுமக்கள் அதிமுகவை ஆதரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக, கூட்டம் தொடங்கும்போது கரூர் சம்பவத்துக்கு 2 நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில், முன்னாள் அமைச்சர்கள் கே.பி.அன்பழகன், முல்லைவேந்தன் மற்றும் அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# “அரசியலில் நடிக்க அமித் ஷாவிடம் விஜய் ஒப்பந்தம் செய்துள்ளார்” : அப்பாவு விமர்சனம்

திருநெல்வேலி: அக்.4-

"அரசியலில் நடிக்க அமித் ஷாவிடம் ஒப்பந்தம் போட்டுவிட்டு விஜய் கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார்" என்று தமிழக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் முதல்வர் கோப்பைக்கான மாநில அளவிலான மகளிர் ஹாக்கி போட்டிகளை தொடங்கி வைத்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: “திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு மைதானத்திலுள்ள செயற்கை இழை மைதானத்தை புனரமைக்க விளையாட்டுத் துறை அமைச்சர் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

தமிழக முதல்வர் எந்த ஒரு காரியத்தையும் எடுத்தேன், கவிழ்த்தேன் என செய்ய மாட்டார். கரூர் சம்பவம் குறித்து தகவல் அறிந்தவுடன் உறக்கமில்லாமல் நள்ளிரவில் நேரடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தினார். வேண்டுமென்றே விஜய் சதி செய்து காலதாமதத்தை ஏற்படுத்தி கரூர் வந்ததாலேயே இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டது.

19 அடி அகலம் உள்ள சாலையில் 12 அடி அகலம் உள்ள பேருந்தில் அவர் வந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டு, நெருக்கடி உருவாகி, உயிரிழப்புகள் ஏற்பட்டன. விஜய் வரும்போதே 10 ஆயிரம் பேரை உடன் அழைத்து வருகிறார். கரூரில் உள்ளூர் மக்கள் அவரை பார்க்க முடியாத நிலை ஏற்பட்டதால் முண்டியடிக்கும் சூழல் உருவானது. பிரச்சாரப் பகுதிக்கு காலதாமதமாக வந்த விஜய் 7 நிமிடம் ஷூட்டிங் முடித்துவிட்டு 41 பேர் உயிரைக் குடித்துவிட்டு தனி விமானம் ஏறி சென்று பனையூரில் பதுங்கி விட்டார்.

கூட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் கட்சியின் தலைவன் நேரடியாக சென்று மக்களை சந்தித்திருக்க வேண்டும். கட்சி கூட்டத்தில் நடந்த நிகழ்வுக்கு அவரது கட்சிக் கொடியை அரைக் கம்பத்திலாவது பறக்கவிட்டு இருக்க வேண்டும். கரூர் சம்பவத்தில் ஆர்எஸ்எஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் விஜய்க்கு ஆதரவாக குரல் கொடுத்த பின்னர் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்து விட்டு மக்களுக்கு ஆறுதல் தெரிவிப்பதாக காணொளி ஒன்றை வெளியிட்டார்.

50 வயதில் விஜய் தான் அங்கிள். ஆனால் அவர் எல்லாரையும் அங்கிள் அங்கிள் என சொல்லி வருகிறார். சினிமாவில் ஒப்பந்தம் போட்டு நடித்துக் கொண்டிருந்த விஜய், அமித் ஷாவிடம் அரசியலில் நடிக்க ஒப்பந்தம் போட்டு கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார். திமுகவுக்கு எந்தக் கட்சிக்கும் ரகசிய தொடர்பு இருந்தது கிடையாது.

நடிகர் விஜய்யை எனக்கு பிடிக்கும். அவரது காமெடிகளை ரசித்து பார்ப்பேன். அந்த வகையில் தமிழக வெற்றி கழகத்துக்கும் திமுகவுக்கும் நேரடி தொடர்புள்ளது. கரூர் விவகாரத்தில் யார் தவறு செய்திருந்தாலும், அவரை வழி நடத்தியவராக இருந்தாலும், இந்த அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கும்” என்று அப்பாவு தெரிவித்தார்.

# ஆதார் அட்டை அப்டேட் செய்வதற்கான சேவை கட்டணம் உயர்வு

சென்னை, அக்.04-

ஆதார் அட்டை அப்டேட் செய்வதற்கான சேவை கட்டணத்தை உயர்த்தியுள்ளது இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யூஐடிஏஐ). இந்த கட்டண உயர்வு அக்டோபர் 1 முதல் அமலுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் வங்கி சேவை, அரசுத் துறை சேவைகள், தொலைபேசி இணைப்பு உட்பட பல்வேறு சேவைகளைப் பெற ஆதார் அட்டை அவசியமானதாக அமைந்துள்ளது. இந்தச் சூழலில் இதில் பயனர்கள் தங்களது தனிப்பட்ட விவரங்கள் மற்றும் பயோமெட்ரிக் விவரங்களை அப்டேட் செய்ய ஆதார் சேவை மையங்களில் கட்டணம் செலுத்த வேண்டி உள்ளது. பயனருக்கு வழங்கப்படும் சேவைக்கு ஏற்ப கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த சேவை கட்டணத்தை யூஐடிஏஐ உயர்த்தி உள்ளது. இதன்படி தற்போது ஆதார் பயனர்கள் பயோமெட்ரிக் அப்டேட் செய்ய கட்டணமாக ரூ.125 செலுத்த வேண்டும். அதேபோல பெயர், பாலினம், பிறந்த தேதி, முகவரி, மொபைல் எண் போன்ற தனிப்பட்ட விவரங்களை ஆதாரில் அப்டேட் செய்ய ரூ.75 செலுத்த வேண்டும். இதற்கு முன்பு இந்த கட்டணம் ரூ.100 மற்றும் ரூ.50 என இருந்தது. இந்த புதிய கட்டண உயர்வு வரும் செப்டம்பர் 30, 2028 வரை அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் ‘மை ஆதார்’ போர்ட்டல் வழியாக அடையாள மற்றும் முகவரியை வரும் ஜூன் 14, 2026 வரை கட்டணமின்றி அப்டேட் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்டம்பர் 30, 2026 வரை குழந்தைகள், சிறார்கள் பயோமெட்ரிக் விவரங்களை அப்டேட் செய்ய கட்டணம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போக்குவரத்து, பொதுத்துறை ஊழியர்களுக்கு 25% தீபாவளி போனஸ்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, அக்.04-

போக்குவரத்துக் கழகங்கள், பொதுத்துறை ஊழியர்களுக்கு 25% தீபாவளி போனஸை உடனடியாக அரசு வழங்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் தீபாவளி வரும் 20ம் நாள் கொண்டாடப்படவிருக்கும் நிலையில், அதைக் கொண்டாடுவதற்கு வசதி யாக போக்குவரத்துக்கழகங்கள், மின்துறை உள்ளிட்ட பொதுத்துறை ஊழியர்களுக்கு இதுவரை மிகை ஊதியம் எனப்படும் போனஸ் அறிவிக் கப்படாதது கண்டிக்க த்தக்கது. உழைக்கும் வர்க்கத்தினரின் நலனின் தங்களுக்கு அக்கறை இல்லை என்பதை திமுக அரசு இதுபோன்று தான் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

2025 ஆம் ஆண்டுக்கான தீபாவளி அக்டோபர் 20 ஆம் நாள் கொண்டாடப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தீபாவளி திருநாளையொட்டி அடித்தட்டு மக்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை அனைவரும் புத்தாடைகள் அணிந்தும், பட்டாசுகளை வெடித்தும் கொண்டாடுவது வழக்கம்.

இதற்கு வசதியாக அரசுத்துறை அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கு முன்பணமும், போக்குவரத்துக் கழகங்கள், மின்துறை உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு முன்பணத்துடன், மிகை ஊதியமும் வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது. தீபாவளித் திருநாளுக்கு குறைந்தது 20 நாள்களுக்கு முன்பாவது இவை வழங்கப்பட்டால் தான் அதைக் கொண்டு தொழிலாளர்கள் குடும்பத்தினருக்கு ஆடைகளை வாங்கி தீபாவளிக்கு தயாராக முடியும்.

வழக்கமாக தீபாவளிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே பொதுத் துறை நிறுவன நிர்வாகங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே பேச்சுகள் நடத்தப்படும். அப்போது தான் மிகை ஊதியத்தின் அளவை கருத்தொற்றுமை அடிப்படையில் தீர்மானித்து, குறைந்தது 20 நாட்களுக்கு முன்பாவது தொழிலாளர்களுக்கு வழங்க இயலும். ஆனால், அக்டோபர் 20 ஆம் நாள் கொண்டாடப்படும் தீபாவளிக்கு இன்னும் 17 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில், இது தொடர்பாக அரசிடமிருந்து எந்த அசைவும் இல்லை; அறிவிப்பும் வரவில்லை.



அதனால், பழைய ஓய்வூதியத் திட்டம், சமவேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட விவகாரங்களில் அரசு ஊழியர்களுக்கு துரோகம் செய்து வரும் திமுக அரசு, மிகை ஊதியம் வழங்குவதிலும் துரோகத்தைத் தொடருமோ? என்று பொதுத்துறை பணியாளர்கள் சந்தேகப்படுகின்றனர். தொழிலாளர்களின் சந்தேகம் சரியானது தான்.


தீபாவளி மிகைஊதியம் வழங்கப்படுவது கட்டாயம் எனும் நிலையில், அதை முன்கூட்டியே அறிவித்து வழங்குவதில் தமிழக அரசுக்கு என்ன தயக்கம்? என்பது தான் தெரியவில்லை. கடந்த ஆண்டு அக்டோபர் 31 ஆம் நாள் தீபாவளித் திருநாள் கொண்டாடப்பட்ட நிலையில், அதற்கான மிகை ஊதியத்தை அறிவிப்பதில் திமுக அரசு தாமதம் செய்தது. பாமக சார்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுத்துறை ஊழியர்களுக்கு 20% மிகை ஊதியம் வழங்கப்படும் என்று அக்டோபர் 10 ஆம் நாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

ஆனால், தீபஒளிக்கு ஒரு நாள் முன்னதாக அக்டோபர் 29 ஆம் நாள் தான் போக்குவரத்துக் கழக பணியாளர்கள் உள்ளிட்ட பெரும்பான்மையான பொதுத்துறை ஊழியர்களுக்கு மிகை ஊதியம் வழங்கப்பட்டது. அதனால், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தீபாவளித் திருநாளை சிறப்பாக கொண்டாட முடியாமல் அவதிப்பட்டனர். இந்த ஆண்டும் அதேபோன்ற மோசமான சூழலை தமிழக அரசு உருவாக்கிவிடக் கூடாது. மேலும், தமிழ்நாட்டில் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் கடந்த 21 ஆண்டுகளாகவே அதிகபட்சமாக 20% மிகை ஊதியம் மட்டும் தான் வழங்கப்பட்டு வருகிறது. பொதுத்துறை நிறுவன தொழிலாளர்களுக்கான மிகை ஊதியம் என்பது அவர்களின் மொத்த ஊதியத்தை கணக்கிட்டு வழங்கப்படுவதில்லை. மாறாக மிகை ஊதியக் கணக்கீட்டுக்கான ஊதிய உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அதன் ஆண்டு சராசரியிலிருந்து தான் 20% மிகை ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 21 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே தொகையே மிகை ஊதியமாக வழங்கப்பட்டு வரும் நிலையில், விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு மிகை ஊதியத்தின் அளவை உயர்த்தி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தாலும் அதை அரசு ஏற்கவில்லை.

பொதுத்துறை நிறுவன தொழிலாளர்களுக்கு நடப்பாண்டிலாவது தீபாவளித் திருநாள் மகிழ்ச்சியானதாக அமைய வேண்டும். அதைக் கருத்தில் கொண்டு நடப்பாண்டில் மிகை ஊதியத்தின் அளவை 25% ஆக உயர்த்த வேண்டும்; அது அடுத்த இரு நாள்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதையும் அரசு உறுதி செய்ய வேண்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





# கோவை வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயிலில் நுழைந்த காட்டு யானை

## பக்தர்கள் அலறி அடித்து ஓட்டம்

கோவை, அக்.04-

கோவை, பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் வளாகத்தில் நேற்று மாலை காட்டு யானை புகுந்தது. வனத்துறையினர் யானையை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

கோவை மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயில். இந்தக் கோயிலில் அவ்வப்போது காட்டு யானைகள் வருவது வழக்கம். நேற்று மாலை உணவு தேடி ஒற்றைக் காட்டு யானை கோயிலுக்குள் புகுந்தது.

இதனால் பக்தர்கள் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர். வனத்துறையினர் விரைந்து சென்று யானையை வனப்பகுதிக்குள் விரட்டினர் தொடர்ந்து இரவு முழுவதும் கண்காணிப்பு பணி மேற்கொண்டனர்.

# தீபாவளி பண்டிகைக்கு 108 சிறப்பு ரயில்கள் இயக்க திட்டம்: தெற்கு ரயில்வே அதிகாரிகள் தகவல்



சென்னை, அக்.04-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தெற்கு ரயில்வே சார்பில் மொத்தம் 108 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் சார்பில், மகாத்மா காந்தியின் 156வது பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும் தூய்மை சேவை பிரச்சார நிறைவு நாள் நிகழ்வு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. தெற்கு ரயில்வே கூடுதல் பொது மேலாளர் பி. மகேஷ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அவருடன் சென்னை ரயில்வே கோட்ட மேலாளர் சைலேந்திர சிங், கூடுதல் கோட்ட மேலாளர்கள் தேஜ் பிரதாப் சிங், அங்கூர் சவுகான் உள்ளிட்ட அதிகாரிகள், ஊழியர்கள் கலந்துகொண்டனர், ரயில்களில் செல்லும்போது எப்படி கவனமாக இருக்க வேண்டும் என நாடகங்கள் மற்றும் பாடல்கள் மூலமாகவும்,ரயில்களில் மற்ற பயணிகளுக்கு பாதிப்பு இல்லாமல் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து, தெற்கு ரயில்வேயின் கூடுதல் பொது மேலாளர் பி.மகேஷ், சென்னை கோட்ட மேலாளர் சைலேந்திர சிங் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தூய்மைப்படுத்தும் பணிகள்: ரயில் நிலையங்களில் தூய்மைப்படுத்தும் பணிகள் மூன்று கட்டங்களாகமேற்கொள்ளப்பட்டன. ஆக.1 முதல் 15ம் தேதி வரை முதல்கட்டமாக நடைமேடைகள், ரயில் நிலையங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆக.16 முதல் செப் .16ம் தேதி வரை 2வது கட்டமாகவும், செப்.17 முதல் அக்.2ம் தேதி வரை மூன்றாவது கட்டமாகவும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒட்டுமொத்தமாக, இந்த தூய்மைப் பணிகளில் 28,000 தன்னார்வலர்கள் பங்கேற்றனர். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தெற்கு ரயில்வே சார்பில், மொத்தம் 108 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. இதில் தென்மாவட்டம் உட்பட தமிழகத்தில் 50 சதவீதம் சிறப்பு ரயில்களும், பிற மாநிலங்களுக்கு 50 சதவீதம் சிறப்பு ரயில்களும் இயக்கப்பட உள்ளன. எப்போது இருந்து இயக்கப்பட உள்ளது என்பது குறித்து விரைவில் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ‘விஜய்யை கூட்டணிக்குள் கொண்டுவரவே கரூர் சம்பவத்துக்கு அரசு பொறுப்பேற்க பாஜக கூறுகிறது’ சீமான்

தூத்துக்குடி, அக்.04-

“கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் விஜய் வருகையால் ஏற்பட்டதுதான். ஆனால், விஜய்யை எப்படியாவது கூட்டணிக்குள் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, கரூர் சம்பவத்துக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என பாஜக சொல்கிறது. இது அரசியல் அல்ல அசிங்கம்.” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய சீமான், “திமுகவுக்கும், பாஜகவுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. திமுக தனது கட்சியில் 90 சதவீதம் இந்துக்கள் உள்ளதாக சொல்கிறது. இந்த தேர்தலில் இஸ்லாமிய, கிறிஸ்தவர்களின் வாக்கை எளிதாக திமுகவால் பெற முடியாது.



ஒரு நடிகரை பார்க்க வந்த கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். அதற்கு விசாரணைக் குழுவை பாஜக அனுப்பியுள்ளது. ஆனால், தூத்துக்குடியில் மக்களே போராடிய போது ஏன் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது?. அப்போது காவல்துறை, மாவட்ட ஆட்சியர் போராடியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாமே?. வன்முறை ஏற்பட்டாலும் கூட கண்ணீர் புகைக்குண்டு வீசித்தானே கூட்டத்தை கலைத்திருக்க வேண்டும். அதற்கெல்லாம் பாஜக விசாரணைக்குழு வந்திருக்க வேண்டியதுதானே?.

கரூர் துயரம் ஓராண்டுக்கு முன்பு நடந்திருந்தால், இவ்வளவு அக்கறை காண்பித்திருக்க மாட்டார்கள். இப்போது சில மாதத்தில் தேர்தல் வருவதால், அரசியல் செய்வதற்காக உண்மை கண்டறியும் குழுவை உடனே அனுப்பியுள்ளார்கள்.

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் விஜய் வருகையால் ஏற்பட்டதுதான். அதற்கு அவர் பொறுப் பேற்கவே இல்லையே?. ‘இந்த சம்பவத்துக்கு காரணமாகிவிட்டேன், மன்னித்துக்கொள்ளுங்கள், இது வலிமிகுந்ததாக உள்ளது, இனி நடக்காமல் பார்த்துக்கொள்கிறேன்’ என்று அவர் வருத்தம் கூட தெரிவிக்கவில்லை. ‘அங்கு நடக்காதது இங்கு ஏன் நடந்தது, அரசுதான் பொறுப்பேற்க வேண்டும், சின்ன இடத்தை கொடுத்தார்கள்’ என விஜய் சொல்கிறார்.

நீங்கள் கேட்ட இடம் தானே இது. அங்குதானே எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு முன்னர் கூட்டம் நடத்தினார். சிறிய இடமாக இருந்தால், அந்த இடம் வேண்டாம் என சொல்லியிருக்க வேண்டியதுதானே. கரூருக்கு அன்று வந்தவுடனே காவல்துறைக்கு நன்றி தெரிவித்து விஜய் பேசினார். சாவு விழுந்தவுடன் அந்த காவல்துறை மீது ஏன் பழிபோடுகிறார். இதனை கேட்கும் போது கடுமையான கோபம் வருகிறது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில் கல்வியாளர்களை, சாதனையாளர்களை அழைத்து பேச வைக்காத தமிழக அரசு, திரைப்பட நடிகர்களை, இயக்குநர்களை பேச வைக்கிறார்கள். கல்வி விழாவுக்கு கூட நடிகர்களை அரசு அழைத்தால், அப்புறம் நடிகர்கள் ஏன் நாடாள துடிக்க மாட்டார்கள். நடிகர்களுக்கு கூட்டம் கூடுவதற்கு இவர்கள்தான் முக்கிய காரணம்.

விஜய் பேசுவதை அவரின் ரசிகர்கள் கேட்பதே இல்லை, கத்திக்கொண்டே இருக்கிறார்கள். முதற்காட்சி சினிமாவுக்கு போவதுபோல விஜய் கூட்டத்துக்கு வருகிறார்கள், இது தெருக்கூத்து.

விஜய்யை எப்படியாவது கூட்டணிக்குள் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, கரூர் சம்பவத்துக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என பாஜக சொல்கிறது. இது அரசியல் அல்ல, அசிங்கம்.

நாங்கள் வரும் தேர்தலில் தனித்தே போட்டியிட உள்ளோம், 150 வேட்பாளர்களை அறிவித்துவிட்டேன். இப்போது திமுகவுக்கும் தவெகவுக்கும் இடையேதான் போட்டி என விஜய் சொல்கிறார். ஈரோடு கிழக்கு தொகுதியில் அவர் எங்கே போனார். அப்போது நாங்கள்தான் களத்தில் நின்றோம்” எனத் தெரிவித்துள்ளார்.



# திருச்சி புனித வளனார் கல்லூரியில் முத்தமிழ் விழாப் போட்டிகள் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவர்கள் சுழற்கோப்பை பெற்றனர்

சின்னாளபட்டி, அக். 04-

திருச்சி புனித வளனார் கல்லூரியில் முத்தமிழ் விழாப் போட்டிகள் தமிழ்துறை சார்பாக நடைபெற்றது. இதில் பங்கேற்ற காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக தமிழ்துறை மற்றும் கல்வியியல் துறை மாணவர்கள் சுழற்கோப்பை பெற்றனர்.

திருச்சி புனித வளனார் (தன்னாட்சி) கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் 20252026ஆம் ஆண்டுக்கான முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது. விழாவை முன்னிட்டு நடைபெற்ற கலை, இலக்கியப் போட்டிகளில் பல்வேறு கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மற்றும் கல்வியியல் துறை மாணவர்கள் பங்கேற்றனர் வினாடி வினா போட்டியில் காந்திகிராம பல்கலையை சேர்ந்த விக்னேஷ், பாரதி முதல் பரிசும், நாடகப்போட்டி மற்றும் கவிதை போட்டியில் தி.ஜெயலட்சுமி இரண்டாம் பரிசும் குழு நடனத்தில் முதல் பரிசு உள்ளிட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர். போட்டிகளில் கலந்துகொண்ட காந்திகிராம பல்கலை மாணவர்கள் 50க்கு 41 புள்ளிகள் பெற்று ஒட்டுமொத்த வெற்றியாளராகத் தேர்வு செய்யப்பட்டு சுழற்கோப்பை வென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ந.பஞ்சநதம், பதிவாளர் மா. சுந்தரமாரி, தமிழ்த் துறைத் தலைவர் பா.ஆனந்தகுமார், கல்வியியல் துறைத் தலைவர் பி.எஸ். ஸ்ரீதேவி ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

# மாவட்ட விளையாட்டு அரங்கில் 2025ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்

மதுரை, அக்.04-

மதுரை மாவட்டம், மாவட்ட விளையாட்டு அரங்கில் 2025ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பதக்கம், நினைவு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் தெரிவிக்கையில்:


தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக 2025-2026ம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் 13 இடங்களில் நடைபெறுகிறது. அதில் மாநில மாணவர்களுக்கு அளவிலான 02.10.2025 தடகளப் போட்டிகள் முதல் மதுரை 04.10.2025 மாவட்டத்தில் வரையும், பள்ளி பள்ளி மாணவியர்களுக்கு 05:102025 முதல் 07.10.2025 வரையும் மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கத்திலும் மற்றும் கிரிக்கெட் போட்டிகள் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு 08.10.2025 முதல் 12.10.2025 வரை மதுரை மாவட்டத்தில் நான்கு கல்லூரிகளில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களை சேர்ந்த 700க்கும் அதிகமான விளையாட்டு வீரர். வீராங்கனைகள். 72 அணி மேலாளர் ஆக மொத்தமாக 800க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தங்குமிட வசதியும். மூன்று நேரமும் 00076/வழங்கப்படுகிறது. மேற்படி மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் முதல் பரிசாக தலா ரூ.10000/மும், இரண்டாமிடம் பரிசாக தலா ரூ.75000/ மூன்றாமிடம் பரிசாக ரூ.50000/மும் அவரவர் வங்கிகணக்கில் வரவு வைக்கப்படும் என தெரிவித்தார்.

தொடர்ந்து மதுரை மாவட்டம். சிறுதூர் ஸ்ரீ கோபால கிருஷ்ணன் மேல்நிலை பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர் D.பிரேம்குமார் அவர்கள் தமிழ்நாடு கபடி அணியில் விளையாடுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதற்கான ஆணையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியல் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப. அவர்கள். மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் அவர்கள். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமலைகுமார் மற்றும் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் (பொ) ஆ.முருகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உலகப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் ஒரு சக்தி இந்தியா: நிர்மலா சீதாராமன்




புதுடெல்லி, அக்.04-

"உலகப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் சக்தியாக இந்தியா உள்ளது. அதேநேரத்தில், இதில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலையற்றத்தன்மையின் அபாயங்கள் பெரும் சவாலாகவே உள்ளன" என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாரான் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற 'கவுடல்யா பொருளாதார மாநாடு 2025'ல் கலந்து கொண்டு 'கொந்தளிப்பான காலத்தில் செழிப்பைத் தேடுதல்' என்ற தலைப்பில் பேசிய நிர்மலா சீதாராமன், "உலகப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக இந்தியா திகழ்கிறது. அதேநேரத்தில், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலையற்றத்தன்மையின் அபாயங்கள் பெரும் சவாலாகவே உள்ளன.

சர்வதேச ஒழுங்கு மாறி வருகிறது. வர்த்தக அளவு மறுவடிவமைப்பு செய்யப்படுகிறது. கூட்டணிகள் சோதிக்கப்படுகின்றன, முதலீடுகள் புவிசார் அரசியல் வழிகளில் மாற்றியமைக்கப்படுகின்றன. பகிரப்பட்ட உறுதிமொழிகள் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன.

நாம் எதிர்கொள்வது தற்காலிக இடையூறுகள் அல்ல, மாறாக ஒரு கட்டமைப்பு மாற்றமாகும். இதில் சில கேள்விகள் இருக்கின்றன. இந்த மாற்றத்தின் மறுபக்கத்தில் என்ன இருக்கிறது? புதிய சமநிலை எப்படி இருக்கும்? அதை யார் வடிவமைப்பார்கள், எந்த அடிப்படையில்?

அதேநேரத்தில், நிதி ஒருங்கிணைப்பு, மூலோபாய சீர்திருத்தங்கள், கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம் போன்ற வலுவான உள்நாட்டு காரணிகளால் இந்தியப் பொருளாதாரம் நங்கூரமிடப்பட்டுள்ளது. இது, வெளிப்புற அதிர்ச்சிகளின் தாக்கத்தைக் குறைக் கிறது. அதேநேரத்தில், நாம் மெத்தனமாக இருந்துவிட முடியாது.

எரிசக்தி பாதுகாப்பு, புத்தாக்கம், தொழிலாளர் சந்தைகள், முதலீட்டுத் தேவை ஆகியவை காரணமாக வளரும் நாடுகள் கடினமான சமரசங்களை எதிர்கொள்கின்றன. இந்த வர்த்தகப் பரிமாற்றங்களில் உள்ள சவால்கள் எளிதில் தீர்க்கப்படுவதில்லை.

அதிர்ச்சிகளை உள்வாங்கும் நமது திறன் வலுவாக உள்ளது. வேறு இடங்களில் எடுக்கப்படும் முடிவுகள் நமது விதிகளைத் தீர்மானிக்கும் உலகில் நாம் செயலற்ற பார்வையாளர்களாக இருக்க முடியாது. எனவே, உலகளாவிய விளைவுகளை வடிவமைப்பதில் வளரும் நாடுகள் பங்கேற்பாளர்களாக இருக்க வேண்டும். சாத்தியமான இடங்களில் விளைவுகளை வடிவமைக்க வேண்டும். தேவையான இடங்களில் சுயாட்சியைப் பாதுகாக்க வேண்டும்.

எனவே, இந்த தருணத்தை ஒரு நெருக்கடியாக மட்டுமல்லாமல், ஒரு வளைவுப் புள்ளியாகவும் கருதுவோம். நமக்கு என்ன எதிர்காலம் காத்திருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்க மட்டுமல்லாமல், நாம் உருவாக்க விரும்பும் எதிர்காலத்தின் வரையறைகளை வகுக்க உரையாடுவோம்" என தெரிவித்துள்ளார்.

# "3 நாள் கழித்து வீடியோ வெளியிடுபவர் ஒரு தலைவராக முடியாது" கரூரில் மார்க்சிஸ்ட் பொதுச் செயலர் எம்.ஏ.பேபி காட்டம்



கரூர், அக்.04-

3 மணி நேரம் கழித்து ட்வீட், 3 நாள் கழித்து வீடியோ வெளியிடுபவர் தலைவராக முடியாது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி கூறியுள்ளார்.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 116 காயமடைந்தனர். இச்சம்பவம் நடந்த பல்வேறு கட்சியினர் பார்வையிட்டு வருகின்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, எம்.பி.க்கள் ராதாகிருஷ்ணன், சிவதாசன் (கேரளா), சச்சிதானந்தம் (திண்டுக்கல்), கட்சி அரசியல் தலைமை குழு உறுப்பினர் வாசுகி, எம்எல்ஏ நாகைமாலி கொண்ட குழுவினர் இன்று (அக்.3) கரூர் வேலுசாமிபுரத்தில் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்ற இடத்தை பார்வையிட்டனர்.

தொடர்ந்து, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவனை சந்தித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவினர் ஆறுதல் கூறினர். தொடர்ந்து, கூட்ட நெரிசலில் உயிரிழந்த கரூர் வேலுசாமிபுரத்தை சேர்ந்த 2 வயதான சிறுவன் துருவிஷ்ணு குடும்பத்தினர் மற்றும் கரூர் ஏமூர்புதூர் பகுதியில் உயிரிழந்த 4 பேரின் குடும்பங்களை சந்தித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக் குழு ஆறுதல் கூறினர்.

கரூர் ஏமூர்புதூரில் செய்தியாளர்களை சந்தித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி கூறியது: "கரூர் வேலுசாமிபுரத்தில் கூட்டம் நடந்த இடத்தையும், அரசு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை பெறுபவரையும், உயிரிழந்தவர்கள் குடும்பங்களை சந்தித்தோம். கூட்ட நெரிசலில் உயிரிழந்த சந்திரா என்பவரின் 14 வயது மகன் சக்திவேல் பள்ளி செல்லாமல் உள்ளார். தீமையில் ஒரு நன்மை என்பதுபோல அவரை பள்ளியில் சேர்த்து படிக்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அடுத்த ஆண்டு மீண்டும் வந்து சக்திவேலை சந்திப்போம்.

இந்த விவகாரத்தில் விரைந்து செயல்பட்ட தமிழக அரசின் நடவடிக்கை பாராட்டுக்கு உரியது. இந்த விவகாரத்தை அரசியல் ரீதியாக அணுகாமல் கூட்டத்தில் சிக்கியவர்களை மீட்டு உரிய சிகிச்சை வழங்கி முதல்வர் இரவோடு இரவாக நேரில் வந்து உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

இதுபோல சம்பவங்கள் எங்கும் நடைபெறக் கூடாது. 500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கூட்டத்தை ஒழுங்குப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ கட்சியினர் தவறிவிட்டனர். 7 மணி நேரத்திற்கு மேலாக காத்திருந்ததில் முதியவர்கள், குழந்தைகள், பெண்கள் தண்ணீரோ, உண்ணவோ எதுவுமின்றி சோர்வடைந்துள்ளனர். இதில் சிபிஐ விசாரணை தேவையில்லை.

கூட்டத்தை தலைவர் கட்டுப்படுத்த வேண்டும். சூழ்நிலை கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். சம்பவம் நடந்த 3 மணி நேரம் கழித்து ட்வீட் செய்து, 3 நாள் கழித்து வீடியோ வெளியிடுபவர் தலைவராக முடியாது. ஒரு துயர சம்பவம் நடந்திருக்கும்போது அங்கு சென்று உதவியிருக்க வேண்டும்.

யார் மீதும் குற்றம் சுமத்துவது? தண்டனை வழங்குவது நோக்கமல்ல. எதிர்காலத்தில் இதுபோல நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக தமிழக அரசு ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைத்துள்ளது" என்று எம்.ஏ.பேபி கூறினார்.

அரசியல் தலைமை குழு உறுப்பினர் வாசுகி கூறியது: "இனி இது போன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக மக்களை சந்திக்கும் நிகழ்ச்சிகளோ, போராட்டங்களோ நடைபெறதா வகையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு விடக்கூடாது. இப்பகுதியில் உள்ளவர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற வேலை வழங்க வேண்டும்" என்று வாசுகி வலியுறுத்தியுள்ளார்.

# கடலூர் மாவட்ட கூட்டுறவுத் துறையில் நியாயமற்ற பணி நியமனம் இந்திய குடியரசு கட்சி பாலவீரவேல் குற்றச்சாட்டு



கடலூர், அக்.04-

தமிழக அரசு, கூட்டுறவு துறை மூலம் நியாய விலை கடையில், விற்பனையாளர் மற்றும் கட்டுனர் பணிக்கு கடலூர் மாவட்ட கூட்டுறவுத் துறை மூலம் கடந்த 09.10.2024ம் தேதி 02/24 இன் படி, ஒரு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதில் 13.ஆயிரம் பேர் நேர்காணல் மற்றும் தேர்வில் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் பணி நிறைவு பெற்ற போதும், கடலூர் மாவட்டத்தில் மட்டுமே கிட்டதட்ட 12 மாதங்கள் கடந்தும் இப்பணிக்கு மட்டுமே பணி நியமன ஆணை வழங்கவில்லை. ஏன் என்றால் நேர்மையான அதிகாரிகள் இருப்பதனால் தகுதி வாய்ந்த திறமையான இட ஒதுக்கீடு அடிப்படையில், தேர்வு செய்ய முயன்ற போது ஆட்சியாளர்களான அமைச்சர் முதல் சட்டமன்ற உறுப்பினர், ஆளும் கட்சி நிர்வாகிகள் வரை பல லட்சம் பெற்றுக் கொண்டு தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு, இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தாமல் ஒரு வருடம் கழித்து, கடலூர் மாவட்ட கூட்டுறவு துறையில் Controler of examination / DR/parsonal officer/Dist.Recurment Boart என்ற பெயரில் நேற்று இரவு 30 09 2025 அன்று 148 பணியாளர்கள் தேர்வாகி இருப்பதாக ஒரு அறிவிப்பு வெளிவந்துள்ளது, இச்செயலை இந்திய குடியரசு கட்சி வன்மையாக கண்டிக்கின்றது,

சட்டவிரோதமாக இந்த நியமனம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தகுதியானவர்கள், இட ஒதுக்கீட்டுக்குள்ளானவர்கள், மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் தமிழக அரசு கூட்டுறவுத்துறை கடலூர் மாவட்ட Controiler of Examinations இந்த உத்தரவை திரும்ப பெற வேண்டும். இந்த உத்தரவை நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணை செய்ய வேண்டும் என இந்திய குடியரசுகட்சி சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம்,

இவ்வாறு இந்திய குடியரசு கட்சி கடலூர் மாவட்ட தலைவர் பால வீரவேல் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



## தங்கம் வெள்ளி விலை நிலவரம்

## தங்கம் - 10840 வெள்ளி - 161




# திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வனத்துறை எச்சரிக்கை

திண்டுக்கல், அக்.04-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மற்றும் உதகை போன்ற சுற்றுலா தளங்கள், மேற்கு தொடர்ச்சி மலைகளை சேர்ந்தது. கொடைக்கானலில் தொண்ணூறு விழுக்காடு சுற்றுலா தளங்கள் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு வரும் சுற்றுலா பயணிகள் வனத்துறைக்குள் சமையல் செய்வது, மது அருந்துவது, புகை பிடிப்பது, பிளாஸ்டிக் பொருட்களை வீசுவது, போன்ற செயல்களில் ஈடுபடுவது வழக்கமான ஒன்றாக ஆகிவிட்டது. ஆகவே வனத்தை பாதுகாக்கும் விதமாக இது போன்ற செயல்களில் ஈடுபட்டால் வனத்துறை சட்டம் 1972 ன் படி கடுமையாக தண்டிக்கப்படுவார்கள், என்று கொடைக்கானல் வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் கவனமுடன் இருக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்



■ திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோழமாதேவி ஊராட்சி மன்ற அலுவலகத்தை பொள்ளாச்சி எம்.பி. கே. ஈஸ்வர சாமி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் சாகுல் அமீர் மற்றும் அரசு துறை அதிகாரிகள், ஊராட்சி செயலாளர் சங்கிலி மற்றும் சோழமாதேவி கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். இதன் தொடர்ச்சியாக நிழற்குடை அமைக்க பூமி பூஜை எம்பி தலைமையில் நடைபெற்றது.



# திருப்பூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் அவினாசியில் மகாத்மா காந்தி 157 வது பிறந்த நாள் விழா

திருப்பூர், அக்.04-

திருப்பூரில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 157வது பிறந்த நாளை முன்னிட்டு, மகாத்மா காந்தியின் திருஉருவச் சிலைக்கு அவினாசி வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் கொங்கு தங்கமுத்து, வடக்கு வட்டார தலைவர் டி.எஸ்.லட்சுமண சாமி, அவினாசி நகர தலைவர் பி.கோபாலசாமி, திருமுருகன் பூண்டி நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.அசோக், அம்மாபாளையம் தலைவர் அவினாசி அப்பன், வேலுச்சாமி சாலைபுரம் காந்திபுரம் கருப்புசாமி, ராதாமணி, ரவி, பிஎம் மணி காந்திபுரம், பழனிச்சாமி தளபதி காந்திபுரம் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

# தேசிய சமூக நீதிக்கட்சி மாநில பொறுப்பாளர்கள் மாவட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைப்பு



திருச்சி, அக்.04-

தேசிய சமூக நீதி கட்சியின் மாநில பொறுப்பாளர் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நிறுவனர் தலைவர் டாக்டர்.வெங்கடேஷ் குமார் தலைமையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள அருண் ஹோட்டலில் மாநில பொறுப்பாளர்கள் மாவட்டச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் நடந்தது. 2026 சட்டமன்ற தேர்தல் கூட்டணி முடிவுகள் மற்றும் மக்கள் பிரச்சனைகள் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது, மேலும் ஆலோசனைக் கூட்டத்தின் மறு தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தேசிய சமூக நீதிக்கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர். வெங்கடேஷ் குமார் தெரிவித்தார். இதில் கரூரில் தவெக தலைவர் விஜய் கூட்டத்தில் ஏற்பட்டநெரிசலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்து ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.



# 750 கிலோ தங்க அம்பாரியை சுமந்து மைசூருவில் தசரா ஜம்பு சவாரி ஊர்வலம்

பெங்களூரு, அக்.04-

கிபி 1610ம் ஆண்டு மைசூருவை ஆண்ட நால்வடி கிருஷ்ணராஜ உடையார் மன்னர், போரில் வென்றதை முன்னிட்டு விஜயதசமி காலக்கட்டத்தில் தசரா விழாவை 10 நாட்கள் கொண்டாட தொடங்கினார். கடந்த 1947ல் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, கர்நாடக அரசின் சார்பில் அரசு விழாவாக தசரா கொண்டாடப்படுகிறது.

415வது ஆண்டாக தசரா விழாவை புக்கர் பரிசு வென்ற கன்னட எழுத்தாளர் பானு முஸ்தாக் கடந்த 22ம் தேதி மைசூரு சாமுண்டீஸ்வரி அம்மனுக்கு சிறப்பு பூஜை செய்து தொடங்கி வைத்தார். தசரா விழாவையொட்டி மைசூரு அரண்மனை, சாமுண்டீஸ்வரி கோயில், கிருஷ்ண ராஜசாகர் அணை, ரயில் நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்டவை வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன.

கடந்த 9 நாட்களும் உணவு திருவிழா, திரைப்பட திருவிழா, கிராமிய விழா, மலர்க் கண்காட்சி, பொருட்காட்சி, இசைக் கச்சேரி, இலக்கிய விழா மற்றும் கன்னட கலை பண்பாட்டை பறைசாற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தசரா திருவிழாவின் இறுதி நாளான நேற்று விஜய தசமியை முன்னிட்டு நண்பகல் 12.15 மணிக்கு மைசூரு அரண்மனையில் உள்ள நந்தி கொடிக்கு முதல்வர் சித்தராமையாவும், துணை முதல்வர் டி.கே.சிவகுமாரும் பூஜை செய்தனர். மைசூரு அரண்மனையில் பாரம்பரிய முறைப்படி நவராத்திரி பூஜை செய்து, மன்னரும் பாஜக எம்பியுமான யதுவீர் தனியார் தர்பார் நடத்தினார்.

இதைத் தொடர்ந்து முதல்வர் சித்தராமையா மாலை 4.40 மணிக்கு ‘ஜம்போ சவாரி’ என அழைக்கப்படும் யானைகளின் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். 56 வயதான அபிமன்யூ யானை 750 கிலோ எடை கொண்ட தங்க அம்பாரியில் சாமுண்டீஸ்வரி அம்மன் வீற்றிருக்கும் சிலையை சுமந்து ராஜ வீதியில் ஊர்வலமாக சென்றது.

இதை பின்தொடர்ந்து ரூபா, காவேரி, ஸ்ரீகண்டா, தனஞ்செயா, மஹேந்திரா, கஜன், பீமா, ஏகலைவா, லட்சுமி உள்ளிட்ட யானைகள் அலங்கரிக்கப்பட்டு கம்பீரமாக சென்றன. ராஜவீதியில் தொடங்கிய ஜம்பு சவாரி, பன்னி மண்டபத்தில் நிறைவடைந்தது. கடந்த 10 நாட்களும் கோலாகலமாக நடைபெற்ற மைசூரு தசரா திருவிழா நேற்றுடன் நிறைவடைந்தது.

# ஏழுமலையான் கோயில் பிரம்மோற்சவம்: 8 நாட்களில் ரூ.25 கோடி உண்டியல் காணிக்கை

திருமலை, அக்.04-

திருப்பதி ஏழுமலையான் கோயில் பிரம்மோற்சவ விழாவில் 8 நாட்களில் மட்டும் உண்டியலில் பக்தர்கள் ரூ.25 கோடியை காணிக்கையாக செலுத்தி உள்ளனர் என திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர். நாயுடு தெரிவித்துள்ளார்.



திருப்பதி ஏழுமலையான் கோயில் பிரம்மோற்சவ விழா நிறைவடைந்ததை தொடர்ந்து, திருமலையில் உள்ள அன்னமய்யா பவனில் திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர். நாயுடு நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

திருப்பதி பிரம்மோற்சவ விழா வெகு சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. இதற்காக பாடுபட்ட அனைத்து தேவஸ்தான அதிகாரிகள், காவல் துறை உயர் அதிகாரிகள், துப்புரவு தொழிலாளர்கள், ஊடகத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பிரம்மோற்சவ விழா தொடங்கியதிலிருந்து அக்டோபர் 1ம் தேதி வரையிலான 8 நாட்களில் மட்டும் ரூ.5.8 லட்சம் பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்துள்ளனர். 26 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்ன பிரசாதம் வழங்கப்பட்டுள்ளது. 2.42 லட்சம் பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தி உள்ளனர். 28 லட்சம் லட்டு பிரசாதங்கள் பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. உண்டியல் மூலம் ரூ.25.12 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது.

ஆந்திர அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் மூலம் 4.4 லட்சம் பக்தர்கள் திருப்பதி திருமலை இடையே பயணித்துள்ளனர். பிரம்மோற்சவ விழாவின்போது முதன்முறையாக 28 மாநிலங்களில் இருந்து 298 குழுவினர் வந்திருந்து மாடவீதிகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளனர். இதில் மொத்தம் 6,976 பேர் பங்கேற்றுள்ளனர். கருட சேவைக்கு மட்டும் 780 கலைஞர்கள் 37 குழுக்களாக பிரிந்து மாட வீதிகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளனர். 65 டன் மலர்கள் இந்த பிரம்மோற்சவ விழாவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 36 எல்இடி தொலைக் காட்சிகள் அமைக்கப்பட்டு வாகன சேவைகள் ஒளிபரப்பப்பட்டன. 3,500 வாரி சேவகர்கள் சிறப்பாக பணியாற்றினார்.

50 மருத்துவர்கள், 60 பாராமெடிக்கல் ஊழியர்கள் சிறப்பாக பணியாற்றினர். 14 ஆம்புலன்ஸ்கள் மருத்துவ சேவைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டன. 5,000 போலீஸார், 1,800 தேவஸ்தான கண்காணிப்பு ஊழியர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். சிறப்பாக பார்க்கிங் வசதி செய்யப்பட்டது. கருட சேவையன்று மட்டும் 16 உணவு வகைகள் மாட வீதிகளில் காத்திருந்த பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. 2,800 துப்புரவு தொழிலாளர்கள் சிறப்பாக பணிபுரிந்தனர். இவ்வாறு பி.ஆர். நாயுடு தெரிவித்தார்.




■ காந்தி ஜெயந்தியை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம் ராக்கியாபாளையத்தில் உள்ள ஜெயம் தோட்டத்தில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இச்சேவையில் இளம் தளிர் நிறுவனர் ஹரிஹர் ரவிச்சந்திரன் மற்றும் வி.ஜே.எஸ் கிளினிக் நிறுவனர் வளர்மதி தலைமையில் இலவச முகாம் நடைபெற்றது. இதில் தி ஐ பவுண்டேசன் மற்றும் Dr. Mohan diabetics மருத்துவமனைகள் கலந்து கொண்டனர். இந்த முகாம் மூலம் இப்பகுதி பொதுமக்கள் 100 பேர் பயண்டைந்துள்ளனர்.

# ‘கரூர் சம்பவத்துக்கு முழு பொறுப்பேற்பீர்’ முதல்வர் ஸ்டாலினுக்கு பாஜக எம்.பி.க்கள் குழு கடிதம் மூலம் சொல்வது என்ன?

சென்னை, அக்.04-

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விரிவான அறிக்கையை கேட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாஜக எம்.பி அனுராக் தாக்குர் கடிதம் எழுதியுள்ளார்.



அந்தக் கடிதத்தின் விவரம்: ‘கரூரில் சமீபத்தில் நிகழ்ந்த கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தோர் குறித்து ஆழ்ந்த கவலையுடனும் வேதனையுடனும் நான் எழுதுகிறேன். தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பாக எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு துயரச் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரையும் சந்தித்தது. மக்கள் மிகவும் வலியுடன் உள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மனதில் இந்தச் சம்பவத்துக்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து கடுமையான கேள்விகள் எழுந்துள்ளன.

இந்தச் சூழ்நிலைக்கு நீங்கள் முழு பொறுப்பேற்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அறிக்கையை விரைவில் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. சம்பவத்துக்கான முதன்மை காரணங்கள்: கரூரில் கூட்ட நெரிசல் ஏற்பட வழிவகுத்த முதன்மைக் காரணிகள் மற்றும் நிகழ்வுகளின் வரிசை என்ன?

2. கூட்ட மேலாண்மை நடவடிக்கைகள்: நிகழ்வுக்கு முன்னும் பின்னும் கூட்டத்தை ஒழுங்குபடுத்தவும், நிர்வகிக்கவும் நிர்வாகம் மற்றும் சட்ட அமலாக்க நிறுவனங்கள் என்ன ஏற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தன?

3. காரண பகுப்பாய்வு: ஆரம்ப கண்டுபிடிப்புகளின்படி, தடுப்பு நடவடிக்கைகள் இருந்தபோதிலும் இந்த சோகம் ஏற்பட காரணமான குறைபாடுகள் அல்லது எதிர்பாராத சூழ்நிலைகள் என்ன?

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க மாநில அரசு திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளை தயவுசெய்து பரிந்துரைத்து பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க மாநில அரசு திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளை தயவுசெய்து பரிந்துரைத்து பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இச்சம்பவம் குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்றும், இந்தச் சம்பவத்தில் கண்டறியப்பட்ட உண்மைகள் குறித்தும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு, கரூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட ஒரு நகலுடன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளருடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட இந்தக் கடிதம் உங்கள் கவனத்துக்கு இணைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் பொறுப்புணர்வுடன், பொதுமக்களின் கேள்விகளுக்கு தீர்வு காணவும், துறை வாரியாக விரிவான பதில்களையும் கடிதம் கோருகிறது’ என்று அந்தக் கடிதத்தில் அனுராக் தாக்குர் எம்.பி தெரிவித்துள்ளார்.



■ திருப்பூர் மாவட்டம் சிவசேனா கட்சி சார்பாக மகாத்மா காந்தி157வது பிறந்தநாள் விழா. சிவசேனா யு பி டி கட்சி சார்பாக காந்தி ஜெயந்தி முன்னிட்டு காந்தி உருவ சிலைக்கு சிவசேனா கட்சியின் மாநில தலைவர் ரவிச்சந்திரன் அவர்கள் மற்றும் மாநில பொதுச் செயலாளர் சுந்தர வடிவேலன் அவர்களின் அறிவுரையின்படியும் திருப்பூர் மாவட்ட தலைவர் கே ஜி சக்திவேலன் தலைமையில் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் வடக்கு மாவட்ட செயலாளர் ட. ஜெயக்குமார் தெற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் தெற்கு மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார் வடக்கு மாநகர செயலாளர் பாரதிராஜா தெற்கு மாநகரச் செயலாளர் அருண்குமார் மற்றும் தெற்கு மாநகர செயலாளர் தினேஷ் குமார் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உறுப்பினர்கள்50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



# திருச்சி,புங்கனூரில் காமராஜர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை

## த.மா.கா விவசாய அணி சார்பில்

திருச்சி, அக்.04-

திருச்சி மாவட்டம்,புங்கனூரில் காந்தி பிறந்த நாள் மற்றும் காமராஜர் நினைவு நாளை முன்னிட்டு காமராஜர், மூப்பனார் அரங்கில் காமராஜர், காந்தி திருவுருவ படங்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி விவசாய அணி மாவட்ட தலைவர் புங்கனூர் செல்வம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இந்நிகழ்வில் நிர்வாகிகள் அழகப்பன், கணேசன், முருகன், நடராஜன், செந்தில், ஜி.கே.ராம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.




■ கர்மவீரர் காமராஜரின் நினைவு தினத்தை முன்னிட்டு திருச்சி மத்திய பேருந்து நிலையம், அருகிலுள்ளஅவரின் திருவருவ சிலைக்கு தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திப்பட்டது.இதனைத்தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்டஉதவிகளைவழங்கினார். இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் அன்பழகன்,மத்தியமாவட்டசெயலாளர்க.வைரமணி,துறையூர்சட்டமன்றஉறுப்பினர்ஸ்டாலின்குமார், மாமன்றஉறுப்பினர்கள், மண்டல தலைவர்கள் பலர் உடன் இருந்தனர்.



# விஜய் உட்பட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்: கரூர் சம்பவத்தில் சமூக செயற்பாட்டாளர்கள் கோரிக்கை

சென்னை, அக்.04-

கரூர் துயரச் சம்பவத்தில் தவெக தலைவர் விஜய் உள்ளிட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீதியரசர் கே.சந்துரு, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி எம்.ஜி.தேவசகாயம், ‘இந்து’ என்.ராம் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் 270க்கும் மேற்பட்டோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை:

விஜய் அரசியல் கட்சி தொடங்கியதிலோ தனது கட்சியினரை அவர் சந்திப்பதிலோ எவருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அவர் தனது கட்சியினரையும் ரசிகர்களையும் சந்திக்கத் தெரிவுசெய்துள்ள முறை,இந்த நாட்டின் அரசியல் முதிர்ச்சிக்கும் பொதுவாழ்க்கைக்கும் தனிமனித கண்ணியத்துக்கும் உகந்ததல்ல.

விக்கிரவாண்டி,மதுரை, திருச்சி, அரியலூர், நாகை ஆகிய இடங்களில் விஜய்யின் கூட்டங்கள் இந்தப் பேரழிவுக்கான முன்னோட்டம் போலவே நடந்திருக்கின்றன. பொதுச் சொத்துகளை சேதப்படுத்தியது, மின் கம்பங்கள், மரங்கள், அருகமைக் கட்டிடங்கள் ஆகியவற்றில் ஏறி சேதப்படுத்தியது என அவரது கட்சியினர் பொறுப்புணர்வின்றியும் கட்டுப்பாடற்றும் சுயஒழுங்கின்றியும் நடந்துகொண்டனர்.

விஜய், அறிவித்திருந்த நேர அளவுக்குள் கரூருக்கு வராமல், தன்னைக் காண திரண்டிருந்தவர்களை 7 மணி நேரத்துக்கும் மேலாககாக்க வைத்ததும், அங்கு குடிநீர், உணவு, கழிவறை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் போதுமானதாக இல்லாதிருந்ததும், உயிரிழப்புக்குக் காரணம் என்பதை காணொளிச் சான்றுகள் காட்டுகின்றன.

ஆனால் இந்த உயிரிழப்புகளுக்குப் பின்னே ‘திட்டமிட்ட சதி’ இருப்பதாகவும் விஜய் மீது எந்தத் தவறுமில்லை எனவும் உண்மைக்கு மாறான ஒரு கட்டுக்கதையை விஜய்யின் ஆதரவாளர்கள் சிலர் பரப்பத் தொடங்கியுள்ளனர். கடந்த 30ம் தேதி விஜய் வெளியிட்ட காணொளியில், தன்னால்தான் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்தன என்பது பற்றிய குற்றவுணர்ச்சியோ வருத்தமோ தார்மீகப் பொறுப்பேற்போ இல்லாமல், அரசின் மீது பழி சுமத்திவிட்டு தப்பித்துவிடும் உள்நோக்கமே தெரிகிறது.

எவ்வளவு கொடிய தீங்கையும் இழைத்துவிட்டுவதந்திகளையும் கட்டுக்கதைகளையும் களமிறக்கி தப்பித்துவிட முடியும் என்கிற விஜய்யின் கெடுநோக்கம் தடுக்கப்பட வேண்டும்.

வருங்காலத்தில் இது போன்ற அவலங்கள் உருவாகாமல் கூட்டத்தை கட்டுப்படுத்தும் வழிவகைகள் கண்டறியப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்ய, கரூர் உயிரிழப்புகளுக்கு காரணமான விஜய் உள்ளிட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த தமிழ்நாடு அரசு தயங்கக் கூடாதென வலியுறுத்துகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000